கட்டுவதற்கு கொள்கை முடிவினை எடுத்து, அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தவகையிலே இப்பொழுது தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற அலுவலகங்கள் மிகவும் நெருக்கடியாக, போதுமான அளவு இட வசதியில்லாமல் செயல்படுகின்றன. அப்படிப்பட்ட கட்டடங்களுக்கு முன்னுரிமை கொடுத்து நிதி நிலைமைக்கேற்ப படிப்படியாக அனைத்துக் கட்டடங்களும் சொந்தக் கட்டடங்களாக கொள்கை முடிவின் அடிப்படையிலே மாற்றப்படுகின்றன. சோழவந்தான் தொகுதியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதியிலே நிதி நிலைமைக்கேற்ப சொந்தக் கட்டடங்களை கட்டுவதற்கு அம்மா அவர்களுடைய அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

17—

குடும்ப நல நீதிமன்றம்

***15692—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டந்தோறும் குடும்ப நல நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் குடும்ப நல நீதிமன்றங்கள் இல்லாத 28 மாவட்டங்களில் அரசு முதற்கட்டமாக திண்டுக்கல்,

ஈரோடு, திருநெல்வேலி, சிவகங்கை, திருவள்ளூர், செங்கல்பட்டு, விழுப்புரம், வேலூர், திருச்சிராப்பள்ளி, தருமபுரி, திருவாரூர், விருதுநகர் மற்றும் நீலகிரி ஆகிய 13 மாவட்டங்களில் மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் தலா ஒரு குடும்ப நல நீதிமன்றம் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், கோயம்புத்தூரில் ஒரு கூடுதல் குடும்ப நல நீதிமன்றம் அமைக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி 14 குடும்ப நல நீதிமன்றங்களை செயல்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கு ஏதுவாக, அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். இன்றைக்குப் பல்வேறு இடங்களில் பாலியல் தொந்தரவுகள், பெண்களுக்கான சில குடும்பப் பிரச்சினைகள் ஏற்படுகின்ற நேரத்தில், அதை விசாரிக்கின்ற வகையில் ஒவ்வொரு நீதிமன்றத்திற்கும் மக்கள் அலைந்து கொண்டிருக்கின்றார்கள். Metropolitan City போன்ற சில இடங்களில் மட்டும்தான் குடும்ப நல நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. ஆகவே, அனைத்து மாவட்டத் தலைநகரங்களில் இருக்கின்ற நீதிமன்றங்களில் இதுபோன்ற குடும்ப நல நீதிமன்றங்களைத் திறந்தால், குடும்ப நல பிரச்சினைகளாக இருந்தாலும் சரி, பாலியல் தொந்தரவுகள் சம்பந்தமான பிரச்சினைகளாக இருந்தாலும் சரி, அவற்றையெல்லாம் அந்த நீதிமன்றங்களில் விசாரிப்பதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே, அனைத்து மாவட்டத் தலைநகரங்களில் இயங்கி வருகின்ற நீதிமன்றங்களில் குடும்ப நல நீதிமன்றங்களை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—10

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 25 ஆண்டுகளில் 7 குடும்ப நல

நீதிமன்றங்கள்தான் துவக்கப்பட்டன. அவற்றிலேகூட 4 நீதிமன்றங்கள் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியிலேதான் துவக்கப்பட்டன. ஆனால், மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டில் பல்வேறு குடும்பங்களில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற பெண்கள், அவர்கள் குடும்பங்களுக்குள்ளேயே சுதந்திரமாகவும், சுயமரியாதையோடும் வாழக்கூடிய நிலைமையில்லாத காரணத்தை உணர்ந்து, 2013—2014 ஆம் நிதியாண்டில் 13 குடும்ப நல நீதிமன்றங்களை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2013—2014 ஆம் நிதியாண்டில் கோரிக்கை எண் 3—ன்கீழ் 30—4—2013 அன்று, ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திண்டுக்கல், ஈரோடு, திருநெல்வேலி, சிவகங்கை, திருவள்ளூர், செங்கல்பட்டு, விழுப்புரம், வேலூர், திருச்சிராப்பள்ளி, தருமபுரி, திருவாரூர், விருதுநகர் மற்றும் நீலகிரி ஆகிய 13 மாவட்டங்களில் 8.06 கோடி ரூபாய் செலவில் நீதிமன்றங்கள் துவக்க ஆணையிட்டார்கள். அதற்கு 16—7—2013 இல் அரசாணை வெளியிடப்பட்டது. அதாவது, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஒரு திட்டத்தை அறிவித்தால், அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுகின்ற அரசாக இருக்கிறது. சரியாக மூன்றரை மாதத்திற்குள்ளாக அரசாணை வெளியிடப்பட்டு, இப்போது உயர் நீதிமன்றம் இந்த நீதிமன்றங்களை துவக்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்கி, வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் நாற்பதிலும் வெற்றி பெற்று, இந்தியாவை அலங்கரிக்க இருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை மீண்டும் வணங்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்திற்கு நன்றியினைக்*

[2014 பிப்ரவரி 1

கூறிக்கொள்கிறேன். சிவகங்கையில் ஒருங்கிணைந்த நீதிமன்றத்தைக் கடந்த சில மாதங்களுக்கு முன்பாகத் திறந்துவைத்து, தற்போது சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கின்ற அந்த நீதிமன்ற வளாகத்தில் குடும்ப நல நீதிமன்றப் பிரிவையும் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அதோடு, என்னுடைய தொகுதியில் இருக்கின்ற இளையான்குடியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்ற நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடத்தையும் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாவட்ட வாரியாக நீதிமன்றங்களை அறிவித்திருக்கிறார்கள். அதற்குரிய நிதி ஆதாரங்களையும் வெளியிட்டிருக்கிறார்கள். உயர் நீதிமன்றம், அந்தந்த மாவட்டங்களில் இட வசதிக்கேற்ப நீதிமன்றங்களைத் துவக்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிக்குத் தலைவணங்கி, நீதிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமல்லாமல்; இந்தியத் திருநாட்டிற்கே நல்லதொரு வழிகாட்டியாக வரவிருக்கின்ற தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், திருமங்கலம் நகரத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 110 ஆண்டுகள் பாரம்பரியம் மிக்க நீதிமன்றத்தை, சார்பு நீதிமன்றமாகத் தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.*

2014 பிப்ரவரி 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கோரிக்கைகள் உயர் நீதிமன்றத்தில் வருகின்றபட்சத்தில், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடுமட்டுமல்லாமல், மூன்றாவது முறையாக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்தக் காலக்கட்டத்தில், புதியதாக 105 நீதிமன்றங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு உருவாக்கியிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

18—

பொறியியல் கல்லூரி

***34497—திருமதி ச. முத்துசெல்வி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவிலில் அரசு பொறியியல் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சங்கரன்கோவில் தொகுதியில் அரசு பொறியியல் கல்லூரி அமைக்கும் கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.